

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 10.01.2026

# நவீன காலனித்துவ ஆக்கிரமிப்பு!

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, அவரது மனைவி சிலியா புளோரஸ் ஆகியோரை, அமெரிக்கா கைது செய்துள்ளது. சங்கிலியால் பிணைத்து, கண்களைக் கட்டி இழுத்துவந்து நியூயார்க் சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டுள்ளார்கள். லத்தீன் அமெரிக்காவின் இறையாண்மையைக் காலில் போட்டு மிதிக்கும் செயல் இது. நவீன காலனித்துவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை இது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், ''வெனிசுலாவில் நடந்துள்ள சமீபத்திய நிகழ்வுகள் மிகுந்த கவலை அளிக்கின்றன. மாறி வரும் சூழ்நிலையை உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். வெனிசுலா மக்களின் நலன், பாதுகாப்பை உறுதி செய்யும்படி இந்தியா வலியுறுத்துகிறது. அனைத்துத் தரப்பினரும், பேச்சுவார்த்தை மூலம் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்துகிறது. தலைநகர் கரஸ்சில் இருக்கும் இந்தியத் தூதரகம், அங்கு வசிக்கும் இந்தியர்கள் அனைவருடனும் தொடர்பில் இருக்கிறது” என்று குறிப்பிட்டுள்ளது.

**இது மிக மிக மேலோட்டமான அறிக்கை ஆகும். கடுமையான கண்டனத்தை இந்தியா பதிவு செய்திருக்க வேண்டும்.**

ஒரு நாட்டின் அதிபரைக் கைது செய்து, கடத்திச் சென்று சிறை வைத்திருப்பது சர்வதேசச் சட்டங்களை மதிக்காத, மற்ற நாடுகளை மதிக்காத, மனித உரிமை மீறல் ஆகும்.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்று வெனிசுலா. ஜனவரி 2 ஆம் தேதியன்று அமெரிக்க அதிபர் டிரம்பின் உத்தரவின் பேரில், ‘ஆபரேஷன் அப்சல்யூட் ரிசால்வ்’ என்ற ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை மூலமாக வெனிசுலாவின் வான் பாதுகாப்பு அமைப்புகளை அமெரிக்கா செயல் இழக்கச் செய்தது.

அமெரிக்காவுக்குள் போதைப்பொருள் கடத்தலில் வெனிசுலா ஈடுபடுவதாக அதிபர் டிரம்ப் குற்றம் சாட்டி வந்த நிலையில், ஜனவரி 3ஆம் தேதி நிக்கோலஸ் மதுரோவும் அவரது மனைவி சிலியா ஃபுளோரன்சும் அமெரிக்கப் படைகளால் கைதுசெய்யப்பட்டுக்கப்பல்மூலம்நியூயார்க்குக்குக்கொண்டுசெல்லப்பட்டனர்.

“இந்தத் தாக்குதல்கள் வெனிசுலாவின் மூல வளங்கள்; குறிப்பாக அதன் எண்ணெய் மற்றும் கனிமங்களைக் கைப்பற்றுவதையும், நாட்டின் அரசியல் சுதந்திரத்தை உடைப்பதையும் நோக்கமாகக் கொண்டவை'' என்று வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ ஒரு அறிக்கையில் தெரிவித்திருந்தார். உடனே அவசரநிலையைச் செயல்படுத்த உத்தரவிட்டிருந்தார். “அனைத்து தேசிய பாதுகாப்புத் திட்டங்களும் சரியான நேரத்தில் மற்றும் பொருத்தமான சூழ்நிலைகளில் செயல்படுத்தப்பட வேண்டும்'' என்றும் அவர் உத்தரவிட்டிருந்தார். “நாட்டின் அனைத்து சமூக மற்றும் அரசியல் சக்திகளும் ஒன்றிணைந்து இந்த ஏகாதிபத்தியத் தாக்குதலைக் கண்டிக்க வேண்டும்” என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார். ஆனால் அவரே உடனடியாக அமெரிக்காவால் கைது செய்யப்பட்டார்.

“நான்ஒருவிஷயத்தைத்திட்டவட்டமாகச்சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். வெனிசுலாவுடன் அமெரிக்கா போரில் ஈடுபடவில்லை. போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோர், தங்கள் நாட்டுக் குற்றவாளிகளை அமெரிக்காவுக்கு அனுப்புவோர் உடன்தான் போரை நடத்துகிறோம். வெனிசுலாவின் வீழ்ச்சிக்கு அதன் தலைமையே காரணம். பலமுறை எச்சரித்தும் அவர்கள் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ளாததாலேயே இந்த நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தது” என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் சொல்லி இருக்கிறார்.

தனது அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு மதுரோவிடம் கேட்கப்பட்டபோது, அவர்: “எனது பெயர் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மோரோஸ். நான் வெனிசுலா குடியரசின் ஜனாதிபதி. ஜனவரி 3ஆம் தேதி முதல் நான் இங்கே கடத்தி வைக்கப்பட்டுள்ளேன்” என்று அறிவித்தார். அமெரிக்க துணை மார்ஷல்கள் அவரை நீதிமன்றத்தில் இருந்து அழைத்துச் சென்றபோது, மதுரோ ஸ்பானிய மொழியில்: “நான் கடத்தப்பட்ட ஒரு ஜனாதிபதி. நான் ஒரு போர்க்கைதி” என்று முழங்கினார்.

**சிலியா புளோரஸுக்கு காயங்கள் இருந்ததாக ‘டெலிகிராப்’ செய்தி வெளியிட்டுள்ளது. “முகத்தில் காயங்கள் தெரிந்தன. அவரது நெற்றியில் ஒரு கோல்ஃப் பந்து அளவிலான வீக்கம் இருந்தது. கன்னங்கள் மற்றும் அவரது வலது கண்ணுக்கு மேல் ஒரு தழும்பு காணப்பட்டது” என்று செய்தி வெளியிட்டுள்ளது. அவரது வழக்கறிஞர் மார்க் டோனெல்லி, “கடத்தலின் போது அவருக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளன” என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.**

சங்கிலியால் பிணைக்கப்பட்ட மற்றும் கலைந்த தோற்றத்தில் இருக்கும் மதுரோவின் புகைப்படங்கள் அவரை அவமானப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இது, சர்வதேசச் சட்டத்தின்கீழ் ஒரு போர்க் குற்றமாகும். மதுரோவும் அவரது மனைவியும் புரூக்ளினில் உள்ள பெருநகர தடுப்பு மையத்தில் (Metropolitan Detention Center) வைக்கப்பட்டுள்ளனர்.

**இதன் பின்னணி என்பது வெனிசுலாவின் எண்ணெய் வளம் தொடர்புடையது என்பதை அனைவரும் அறிவார்கள். உலகின் மிகப்பெரிய எண்ணெய் இருப்பு கொண்ட நாடுகளில் வெனிசுலாவும் ஒன்று. வெனிசுலாவின் ஐ.நா. தூதர் சாமுவேல் மொன்கடா, அமெரிக்கா தனது நாட்டின் எண்ணெய் வளங்களைக் கைப்பற்றும் நோக்கில் வெனிசுலாவைத் தாக்குவதாகக் குற்றம் சாட்டினார். “இது காலனித்துவம் மற்றும் நவீன காலனித்துவத்தின் மிக மோசமான நடைமுறைகளை மீண்டும் கொண்டுவரும் ஒரு நடவடிக்கையாகும்” என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டி உள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் விளக்கமளிக்க அழைக்கப்பட்ட பொருளாதார நிபுணர் ஜெஃப்ரி சாக்ஸ், இந்தத் தாக்குதலின் உள்ளடக்கத்தை விளக்கினார். 2002இல் அமெரிக்க ஆதரவுடன் நடத்தப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி, 2014இல் அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு நிதியுதவி அளித்தது, எண்ணெய் உற்பத்தியை 75 சதவிகிதமும், தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) 62 சதவிகிதமும் வீழ்ச்சியடையச் செய்த கடுமையான பொருளாதாரத் தடைகள், 2019இல் ஜுவான் குவைடோவை இடைக்கால ஜனாதிபதியாக ஒருதலைப்பட்சமாக அங்கீகரித்தது மற்றும் வெனிசுலாவின் 7 பில்லியன் டாலர் மதிப்பிலான அரசுச் சொத்துகளைக் கைப்பற்றியது ஆகியவற்றை அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

வெனிசுலா மீது அமெரிக்கா தொடுத்துள்ள தாக்குதலானது ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை அப்பட்டமாக மீறி, ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின்மீது நடத்தப்பட்ட தாக்குதலாகும்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2026) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, பாடியநல்லூரில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் “உங்க கனவ சொல்லுங்க” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார். இவ்விழாவில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சசிகாந்த் செந்தில், டாக்டர் கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், எஸ். சந்திரன், டி.ஜெ. கோவிந்தராஜன், வி.ஜி. ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், கே.பி.பி. சங்கர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2026) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, பாடியநல்லூரில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் “உங்க கனவ சொல்லுங்க” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, இத்திட்டப் பணிகளை மேற்கொள்ளும் தன்னார்வலர்களுக்கு தொப்பி மற்றும் கைப்பேசி இணைப்புகள் ஆகியவற்றை வழங்கினார். இவ்விழாவில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சசிகாந்த் செந்தில், டாக்டர் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம், எஸ். சந்திரன், டி.ஜெ. கோவிந்தராஜன், வி.ஜி. ராஜேந்திரன், ஆ. கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், கே.பி.பி. சங்கர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பொதுமக்களின் எதிர்காலக் கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறிய

# “உங்க கனவ சொல்லுங்க” என்ற புதிய திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 10 - தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து பொது மக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும் “உங்க கனவ சொல்லுங்க” என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2026) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, பாடியநல்லூரில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் “உங்க கனவ சொல்லுங்க” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை, தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் வரை பயன்பெறும் வகையில் பல்வேறு சமூக நலத் திட்டங்களை அறிவித்து வெற்றிகரமாக செயல்படுத்தி அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்கள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்கி வருகிறது.

அந்த வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட பல்வேறு அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் **“உங்க கனவ சொல்லுங்க”** என்ற திட்டத்தினை செயல்படுத்த முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

**“உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தில்**, தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.91 கோடி கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்கள் பயன்பெற்ற திட்டங்கள் மற்றும் கனவுகளை 50,000 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி கண்டறிய எடுக்கப்படும் முன் மாதிரி முயற்சியாகும். இந்த களப்பணி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பணிக்காக மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த சுமார் 50,000 உறுப்பினர்கள் தன்னார்வலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இப்பணிகளை மேற்கொள்ள உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துகளை பதிவு செய்ய தனியாக கைபேசி செயலி இதற்கென உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்த விவரங்கள் அனைத்து ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலும், நாளிதழ்கள், சமூக ஊடகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்மூலம்முன்கூட்டியே முறையாக விளம்பரப்படுத்தப்பட்டு, விழிப்புணர்வு பணிகளை செய்தி மக்கள் தொடர்புத் துறை ஒருங்கிணைக்கும்.

தன்னார்வலர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு முறை செல்வர். முதல் முறை வீட்டிற்கு செல்லும் போது விண்ணப்ப படிவத்தினை குடும்பத் தலைவர் / உறுப்பினரிடம் வழங்குவர். அவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசு திட்டங்களின் பெயர் பட்டியல் விவரங்களை அவர்களிடம் தெரிவித்து, படிவத்தினை பூர்த்தி செய்து தரும்படி கோருவர்.

தன்னார்வலர்கள், இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தினை சரிபார்த்து கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்வர். கைபேசி செயலியில் பதிவேற்றியப் பின்னர் அக்குடும்பத்திற்கு தனித்துவமான அடையாள எண்ணுடன் கூடிய கனவு அட்டையினை வழங்குவர். இந்த அட்டை மூலம் www.uks.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களது கனவு / கோரிக்கையின் நிலை குறித்து தெரிந்துக் கொள்ளலாம்.

நேற்று பொன்னேரி வட்டம், பாடியநல்லூரில் நடைபெற்ற “உங்க கனவ சொல்லுங்க” திட்ட தொடக்கவிழாவில், முதலமைச்சர் அவர்களிடம் பயனாளிகள் நேரடியாக தங்கள் கருத்துக்களையும், கனவுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களைச் சார்ந்த பொதுமக்கள் தங்கள் கருத்துகளையும் கனவுகளையும் காணொலி வாயிலாக முதலமைச்சர் அவர்களிடம் பகிர்ந்து கொண்டனர்.

பின்னர், முதலமைச்சர் அவர்கள், இந்நிகழ்ச்சியில் தங்கள் கனவுகளை தெரிவித்த பெண்மணிகளுக்கு இத்திட்டத்தில் பங்கேற்றதற்கான கனவு அட்டைகளையும், இத்திட்டப் பணிகளை மேற்கொள்ளும் தன்னார்வலர்களுக்கு தொப்பி மற்றும் கைப்பேசி data card ஆகியவற்றையும் வழங்கினார்.

இவ்விழாவில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சசிகாந்த் செந்தில், டாக்டர் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், எஸ்.சந்திரன், டி.ஜெ.கோவிந்தராஜன், வி.ஜி. ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், கே.பி.பி. சங்கர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி. ஷஜீவனா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை அருணை தமிழ்சங்கத்தின் 2026ஆம் ஆண்டுக்கான விருதுகளுக்கு வின்னப்பித்தவர்களுக்கான தேர்வுக்குழு கூட்டம், அதன் தலைவர் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. உடன் செயலாளர் வே.ஆல்பர்ட், பொருளாளர் எம்.இ.ஜமாலுதின், துணைத் தலைவர் எ.வ.குமரன், மாநில தடகள சங்க சீனியர் துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை எம்.பி, எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்தி வேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன் உட்பட பலர் உள்ளனர்.